## பாடம் - 2. மாசில்லாத உலகம் படைப்போம்

**பாடம்: தமிழ்**

**வகுப்பு: 4**

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. 'மாசு' - என்னும் பொருள் தராத சொல்

**அ) தூய்மை** ஆ) தூய்மையின்மை இ) அழுக்கு ஈ) கசடு

2. மாசு + இல்லாத' - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) மாசிலாத **ஆ) மாசில்லாத** இ) மாசி இல்லாத ஈ) மாசு இல்லாத

3. அவ்வுருவம்' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது _

அ) அவ் + வுருவம் ஆ) அந்த + உருவம் **இ) அ + உருவம்** ஈ)அவ் + உருவம்

4. 'நெடிதுயர்ந்து' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது

**அ) நெடிது + உயர்ந்து** ஆ) நெடி + துயர்ந்து இ) நெடிது + துயர்ந்து ஈ)நெடிது +யர்ந்து

5. குறையாத என்ற சொல்லின் எதிர்ச்சொல்

**அ) நிறையாத** ஆ) குறைபாடுடைய இ) குற்றமுடைய ஈ) முடிக்கப்படாத

### ஆ. வினாக்களுக்கு விடையளிக்க.

**1. ஆசிரியர் வைத்திருந்த அழைப்பிதழில் என்ன செய்தி இருந்தது?.**

ஆசிரியர் வைத்திருந்த அழைப்பிதழில் 'அறிவியல் திருவிழா' பற்றிய செய்தி இருந்தது.

**2. அறிவியல் விழாவில் கலந்துகொள்வதற்காக மாணவர்களை ஆசிரியர் எவ்வாறு ஊக்கப்படுத்தினார்?**

"வழக்கமான ஆய்வுகள் போல் அல்லாமல், புதுமையாக முயற்சி செய்யுங்கள். பரிசு பெறுவதனைவிட, உங்களுடைய மாறுபட்ட சிந்தனைக்கு முன்னுரிமை தாருங்கள். அதனையே செயல்படுத்துங்கள்" இவ்வாறு மாணவர்களை ஆசிரியர் ஊக்கப்படுத்தினார்.

**3. அறிவியல் விழாவில் காணப்பட்ட நெடிதுயர்ந்த உருவத்தை எப்படி உருவாக்கினர்?**

- விழா அரங்கின் வாசலில் நெடிதுயர்ந்து நின்ற உருவம் முழுவதும் பயன்படுத்தித் தூக்கி எறியப்பட்ட மின்னணுக் கழிவுகளால் செய்யப்பட்டிருந்தது.
- பழுதான கணினிகளின் பகுதிப் பொருள்கள் ஓர் அரக்கனின் வடிவில் உருவாக்கப்பட்டிருந்தன.
- அதன் மார்புப் பகுதியில் ஒரு மடிக்கணினி பொருத்தப்பட்டிருந்தது.
- தோள்பட்டையில் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது.
- அரக்கன் பேசுவதுபோல் அமைக்கப்பட்டிருந்தது.

4. சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கு எவையெல்லாம் காரணமாக அமைகின்றன?

ஒவ்வொரு நாளும் உங்களால் தூக்கி எறியப்படும் மின்னணுக் கழிவுகள் நிலத்தையும் சுற்றுச்சூழலையும் பெரிதும் சீர்கேட்டுக்கு உள்ளாக்குகின்றன.

5. நாம் பயன்படுத்திய மின்பொருள்களை என்ன செய்ய வேண்டும்?

- நாம் பயன்படுத்திய மின்னணுப் பொருள்களைத் தேவைக்குப் பயன்படுத்த வேண்டும்.
- கண்ட இடங்களில் தூக்கி எறிந்திடாமல் முறையாக மறுசுழற்சிக்கு உட்படுத்த வேண்டும்.

## இ. பாடுவோம் விடை கூறுவோம் எது சரி ? தவறு ?

| | |
|---|---|
| 1.கண்ட இடத்தில் குப்பையைக் கொட்டுவது | தவறு |
| 2.குப்பையைக் குப்பைத்தொட்டியில் போடுவது | சரி |
| 3.பயன்படுத்தாதபோதும் மின்விளக்கை எரிய விடுவது | தவறு |
| 4.நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது | சரி |
| 5.சாலையின் ஓரமாக நடந்து செல்வது | சரி |
| 6.பறவைகளையும் விலங்குகளையும் துன்புறுத்துவது | தவறு |

## ஈ. தொடர் இரண்டு; விடை ஒன்று கண்டுபிடிப்போமா?

1. காலைக்குப் பின்னால் வரும்; கழுத்தில் வந்து விழும் மாலை
2. ஆடையுமாகும்; அறிவையும் தரும் நூல்

## உ. ஒரு சொல்லுக்கு இரு பொருள் எழுதுக

1. அணி - வரிசை, அணிந்துகொள்
2. ஆடு - விலங்கினம், நடனம் ஆடு
3. நாடு - விரும்பு, இந்திய நாடு
4. படி - மாடிப்படி, நூல்களைப் படித்தல்
5. ஓடு - வேகமாக ஓடு, வீட்டின் மேற்கூரையாக அமையும்.
6. மெய் - உண்மை, உடல்